30.10.2025

O.S.No. 203/2024

DW1– மாடக்கண்ணு – க/பெ. பூசைக்கிளி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 30.10.2025

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை நான் படித்துப்பார்த்துதான் தாக்கல் செய்தேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது கணவர் பெயர் பூசைக்கிளி. அவர் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என தெரியாது. எனக்கு இந்த வழக்கு என்னவென்று தெரியாது, நான் கோவில் சொத்து சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன், நான் தான் அதில் உழுதுவருகிறேன்.

2. அணைக்கரை முத்து எனது கணவரின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அணைக்கரை முத்துவின் மனைவிதான் நேசமணி என்றால் சரியல்ல, அவர் பெயர் சுப்பம்மாள். இது தொடர்பாக எனது கணவர் தாக்கல் செய்த எதிருரையில் எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. செல்வசுந்தரி, சுசிலா, பிரேமா, ராஜன் மற்றும் அனிதா ஆகியோர் அணைக்கரைமுத்துவின் பிள்ளைகள் என்றால் சரிதான். அனிதா தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். அவரது வாரிசுகள் தான் 6,7 பிரதிவாதி என்றால் சரிதான்.

3. எனது கணவரும், அணைக்கரை முத்துவும் பிராதுதபசில்சொத்தை 1992ம் ஆண்டுகிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதில் பத்திரம் தாக்கல் செய்தவரே பூசைக்கிளி என

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரமே செல்லாது என கோவில் நிர்வாகம் சொல்லிவிட்டது. மேற்படி ஆவணம் செல்லாது என காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

4. இந்த வழக்கு சொத்து சம்பந்தமான அடவோலையை நீதிமன்றத்தில் தாக்கல்செய்தேன். நான் இந்த வழக்கில் எந்த அடவோலையும் தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல, நான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை மட்டுமே தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேலும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்ய எனக்கு எந்த அருகதையும் கிடையாது, அதில் உள்ள அதிகாரி மட்டுமே தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல.

5. நான் இணையாணையர் நிர்வாக அதிகாரி, ஸ்ரீரங்கநாதசுவாமி திருக்கோவில் ஸ்ரீரங்கம், நிர்வாக அதிகாரி சிவசைலநாத திருக்கோவில், சிவசைலம் தலைமை உதவியாளர் ஆவண காப்பகம், ஆட்சியர்அலுவலகம் தென்காசி ஆகியோர்களை விசாரிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவை எதற்காக திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் நான்தான் பயிர் செய்வதால் திரும்ப பெற்றுக்கொண்டேன். திரும்பபெற்ற மனுவில் என் கணவர் தான் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். ஆனால் எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் எனது கணவருக்கு கண்பார்வை குறைவு உள்ளதாலும், செவித்திறன் குறைவு உள்ளதாலும் அவரால் சாட்சியம் அளிக்கமுடியாது நான் சாட்சியம் அளிக்கிறேன் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 17.09.2025 தேதியில் எனது கணவர் இடைக்கால மனுவில்

உள்ள உறுதிக்கூற்றை அவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே பிரதிவாதியால் சாட்சியம்அளிக்கமுடியாத நிலையில் உள்ளார் என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. தபசில் சொத்துக்கான புல எண்.196/1 ஸ்ரீரங்கநாத கோவிலுக்கு உள்ளது, புல எண்.197/1 சிவசைலநாத கோவிலுக்கு உள்ளது. எல்கைமால் முழுவதுமே கோவில் சொத்துதான். நான்கு எல்கைமாலிலும் யார் பயிர் செய்கிறார்கள் என எனக்கு தெரியாது. தபசில் சொத்துக்கான அடங்கல் மற்றும் "அ" பதிவேடு கோவில் பெயரில் இல்லை என்றால் சரியல்ல, அவை போலியான பத்திரங்கள்.

7. இந்து அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் இந்து அறநிலையத்துறை official website ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம் என் பெயரில் நான் உழும் சொத்தும் வரும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனக்கு புரியவில்லை.

8. தபசில் சொத்துக்கள் ஸ்ரீரங்கநாத கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்துஇல்லை என்பதால்தான் இந்துஅறநிலையத்துறை official website ல் தபசில் சொத்தில் புல எண் துலங்கவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் நான் தாக்கல் செய்த இ.ம.எண்.2/2025 யை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

9. நான் ஒருகாலமும் தபசில்சொத்தை உழுததில்லை, நான் வழக்கிற்காக அணைக்கரை முத்துவின் வாரிசுகள் சொத்தைஅனுபவம்

செய்யக்கூடாது என இடைஞ்சல்செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. பழைய செட்டில்மெண்ட் பதிவேட்டில் உள்ள குறைகளை வைத்துக்கொண்டு தபசில்சொத்தை கோவில் சொத்து எனவம்பாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

10. உண்மையில் தபசில் சொத்து திருக்கோவில் எனக்கு பாடுபடும் உரிமை கொடுத்திருந்தால் அதற்கான அடைவோலையும், எந்த ஆண்டிலிருந்து நான் விவசாயம் செய்துவருகிறேனோ அதற்கான பசலி ரசீதுகளையும் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனவே வாதிகள் கோரியபடி வாதிகளுக்கு பாதி பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.